
# 06 அன்றும் இன்றும்



முன்னொரு காலத்தில் வாரணாசி என்ற நகரை பிரம்மதத்த என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனது மகன் பிரம்மதத்த. அரசன் தனது மகன் பிரம்மதத்த இளவரசனை தக்சலா திசாபாமொக் ஆசானிடம் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.



இளவரசன் ஆசானைச் சந்தித்தான். தான் வந்த காரணத்தைக் கூறி நமஸ்காரம் செய்தான்.



ஒரு நாள் வழக்கம் போல ஆசான் நீராடப் போகும்போது இளவரசனையும் அவருடன் கூட்டிச் சென்றார்.



போகும் வழியில் மூதாட்டி ஒருவரின் எள்ளுப் பாயை கண்ட இளவரசன், அதில் ஒரு பிடியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.



தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் நாளும் அப்படியே செய்தான்.

இதைக் கண்ட மூதாட்டி கோபத்துடன் ஆசானைத் திட்டினாள். இது தொடர்பாக மூதாட்டியிடம் ஆசான் விசாரித்தார். மூதாட்டி நடந்தவற்றைக் கூற, ஆசான் அதற்குப் பணம் தருவதாகக் கூறினார்.

அதற்கு மூதாட்டி, 'பணம் தேவையில்லை. இனி இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றாள்.




இதைக் கேட்ட ஆசான் இளவரசனை மூங்கில் பிரம்பால் தண்டித்தார். இத் தண்டனையால் கோபம் கொண்ட இளவரசன் ஆசான் மீது பகைமை கொண்டான்.



சிறிது காலத்திற்குப் பின்னர் முழுமை பெற்ற கல்வியோடு இளவரசன் தன் நாட்டிற் குச் சென்று அரச பதவியை ஏற்றுக் கொண்டான். பதவி ஏற்ற அரசன் தன் ஆசானை பழிவாங்கும் நோக்கத்தோடு அரச மாளிகைக்கு வருமாறு அவரை அழைத்தார்.

அரசனின் நோக்கத்தை அறிந்த ஆசான், கால தாமதம் செய்து, பல வருடங்களுக்கு பின்னர், முதுமைத் தோற்றத்துடன் அரசனைச் சந்திக்கச் சென்றார்.



ஆசானைக் கண்ட அரசன் தனக்கு அவர் வழங்கிய தண்டனைக்காக அவரைத் தண்டிக்குமாறு அரச சபைக்கு ஆணையிட்டார்.

இதைக் கேட்ட ஆசான் ‘அன்றைய தவறுக்கு தான் தண்டிக்காது விட்டிருந்தால் இன்று தங்களுக்கு இந்த அரச பதவி கிடைத்திருக்காது, என்றார்.



இதைக் கேட்ட அரச சபை மந்திரிமார் ஆசானின் பதிலை ஏற்று அரசனுக்கு அறிவுரை கூறினார்கள். அரசனும் அதனை ஏற்றுக்கொண்டு ஆசானுக்கு பிரதி உபகாரம் செய்யுமாறு மந்திரிமார்களிடம் கேட்டுக் கொண்டார்.

*(திலமுட்டி ஜாதகக் கதை)*

**சொல் அறிமுகம்**
වදන් පෙළ

| | | |
|---|---|---|
| முன்னொரு | - | එක් කලෙක |
| கல்வி கற்க | - | අධ්‍යාපනය ලැබීමට |
| சந்தித்து | - | මුණගැසිලා |
| பின்னால் | - | පිටුපසින් |
| மூதாட்டி | - | මැහැල්ල |
| கோபம் | - | කෝපය |
| விடயம் | - | කරුණ |
| தண்டித்தார் | - | දඬුවම් කළේය |
| தண்டிக்குமாறு | - | දඬුවම් කරන ලෙස |
| வயோதிபர் | - | වැඩි මහල්ලා |
| முதுமை | - | මහළු බව |

## செயற்பாடு 1
## ක්‍රියාකාරකම 1

கதையை மீண்டும் வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
කතාව නැවත කියවා පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.

01. வாரணாசியை ஆண்ட அரசனின் பெயர் என்ன ?

02. இளவரசன் கல்வி கற்பதற்காக அரசன் அவரை யாரிடம் அனுப்பி வைத்தார் ?

03. நீராடப் போகும் பொழுது இளவரசன் வழியில் எதைக் கண்டார் ?

04. இளவரசன் செய்த தவறு என்ன ?

05. இளவரசன் ஆசானின் மீது எதற்காகப் பகைமை கொண்டார்?

## செயற்பாடு 2
## ක්‍රියාකාරකම 2

பின்வரும் படங்களுக்குரிய இலக்கங்களை அவற்றுக்குப் பொருத்தமான வாக்கியங்களுக்கு நேரே உள்ள கட்டங்களில் எழுதுங்கள்.
පහත සඳහන් පින්තූරවලට අවධානය යොමු කර ඒ පින්තූරයේ ඇති ඉලක්කම පහත සඳහන් වාක්‍යයට ගැළපෙන ආකාරයට කොටුව තුළ යොදන්න.

1



2



3



4



5




6



7



8



9



01. காலை உணவு உண்பேன். ☐

02. பல் துலக்குவேன். ☐

03. காலையில் எழுவேன். ☐

04. முகம் கழுவுவேன். ☐

05. ஆசிரியரை வணங்குவேன். ☐

06. காவி உடை அணிவேன். ☐

07. வகுப்பறைக்குப் போவேன். ☐

08. புத்தகப் பையை எடுப்பேன். ☐

09. புத்த பெருமானை வணங்குவேன். ☐



## செயற்பாடு 3
## ක්‍රියාකාරකම 3

பின்வரும் உதாரணத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

පහත උදාහරණ අවධානයට ගෙන හිස්තැන් පුරවන්න.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ. | அம்மா | + வ் | + உடன் | = | அம்மாவுடன் |
| | அம்மா | + வ் | + ஒடு | = | அம்மாவோடு |

01. அப்பா = ____________________
    அப்பா = ____________________

02. விமலா = ____________________
    விமலா = ____________________

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | ஆசிரியர் | + உடன் | = | ஆசிரியருடன் |
| | ஆசிரியர் | + ஒடு | = | ஆசிரியரோடு |

01. கமல் = ____________________
    கமல் = ____________________

02. நாய் = ____________________
    நாய் = ____________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ. | குடம் (ம் struck out) | + த்த் | + உடன் | = | குடத்துடன் |
| | குடம் (ம் struck out) | + த்த் | + ஒடு | = | குடத்தோடு |

01. படம் = ____________________
    படம் = ____________________

02. பாடம் = ____________________
    பாடம் = ____________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ. | தம்பி | + ய் | + உடன் | = | தம்பியுடன் |
| | தம்பி | + ய் | + ஒடு | = | தம்பியோடு |

01. தங்கை = ____________________
தங்கை = ____________________

02. ஜலனீ = ____________________
ஜலனீ = ____________________



## செயற்பாடு 4
## ක්‍රියාකාරකම 4

உதாரணத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புங்கள்.
උදාහරණයට අවධානය යොමු කර හිස්තැන් පුරවන්න.

அக்கா, சாமா, அப்பா, அண்ணா, மாமா

01. நான் அக்காவோடு போகின்றேன்.
02. நான் ____________________ சமைக்கின்றேன்.
03. நான் ____________________ வருகின்றேன்.
04. நான் ____________________ குடிக்கின்றேன்.
05. நான் ____________________ பாடுகின்றேன்.

தம்பி, தங்கை, மாமி, அரசி, பாட்டி

06. நான் தம்பியோடு போகின்றேன்
07. நான் ____________________ சமைக்கின்றேன்
08. நான் ____________________ வருகின்றேன்
09. நான் ____________________ குடிக்கின்றேன்
10. நான் ____________________ பாடுகின்றேன்

## செயற்பாடு 5
## ක්‍රියාකාරකම 5

கட்டத்துக்குள் இருக்கும் எழுத்துக்களை கொண்டு சொற்களை ஆக்குங்கள்.
කොටුව තුළ ඇති අකුරු ගෙන වචන සාදන්න.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ளு, | ம, | ர, | ர், | கா, | ல, | ண, | பு, |
| ல், | போ, | வா, | ரா, | ண, | ஸ, | வ, | மு, |
| ன், | னொ, | ரு, | பி, | னா, | மூ, | டி, | யு, |
| ப், | ர, | ப, | யே, | கோ, | ல், | வி, | ட, |
| ய, | தை, | வா, | ம, | ள, | ண, | ழி, | ரா, |
| ம, | ம், | பு | | | | | |

01. ____________________ 02. ____________________
03. ____________________ 04. ____________________
05. ____________________ 06. ____________________
07. ____________________ 08. ____________________
09. ____________________ 10. ____________________.

## செயற்பாடு 6
## ක්‍රියාකාරකම 6

ஆசிரியரின் உதவியுடன் பின்வரும் இலக்கங்களை அறிந்து இடைவெளிகளை நிரப்புங்கள்.
ගුරුවරයාගේ සහාය ඇතුව පහත සඳහන් සංඛ්‍යා හඳුනාගෙන හිස්තැන් පුරවන්න.

21. இருபத்தொன்று
22. இருபத்திரண்டு
23. இருபத்துமூன்று
24. இருபத்துநான்கு
25. இருபத்தைந்து
26. இருபத்தாறு
27. இருபத்தேழு
28. இருபத்தெட்டு
29. இருபத்தொன்பது
30. முப்பது

| | | | |
|---|---|---|---|
| 40. | நாற்பது | 50. | ஐம்பது |
| 60. | அறுபது | 70. | எழுபது |
| 80. | எண்பது | 90. | தொண்ணூறு |
| 100. | நூறு | | |

31. முப்பத்____________ 32. முப்பத்____________

33. முப்பத்து____________ 34. முப்பத்து____________

35. முப்பத்____________ 36. முப்பத்____________

37. முப்பத்____________ 38. முப்பத்____________

39. முப்பத்____________ 40. நாற்பது

41. ____________ 42. ____________

43. ____________ 44. ____________

45. ____________ 46. ____________

47. ____________ 48. ____________

49. ____________ 50. ஐம்பது

52. ____________ 61. ____________

73. ____________ 65. ____________

58. ____________ 47. ____________